පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 492

ආයතනයේ නම: පරිසර අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 492

நிறுவனத்தின் பெயர்: சுற்றாடல் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரசின் கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக, நிலையான கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ், கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடபாக பாராளுமன்றத்துக்கு முன் வைத்தல்

**Parliamentary Publication Series No.: 492**

**Name of Institution: Ministry of Environment**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492**

**நிறுவனத்தின் பெயர் : சுற்றாடல் அமைச்சு**

**பாராளுமன்றத்தின் அரசின் கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக, நிலையான கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ், கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடபாக பாராளுமன்றத்துக்கு முன் வைத்தல் – 2023 நிதியாண்டு**

| குழுவினால் இனங் காணப்பட்ட குறைப்பாடுகள் | குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் / தற்போதைய நிலை |
|---|---|
| **முதலாவது பிரிவு** | |
| 2022.12.13 ஆம் திகதியிட்ட 2022/05 ஆம் இலக்கம் அரச கணக்குத் திணைக்களத்தின் வழி காட்டுதல்களின் படி 8.1 மற்றும் 8.2 ஆகிய பந்திகளின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்துக்கள் தொகுதி இன்று வரை பேணப்படவில்லை. | தற்போது, சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் நிலையான சொத்து தொகுதி இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதம் காலத்திற்குள் பதில்கள் அனுப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br><br>இவ் விடயம் தொடர்பாக பிரிவுத் தலைவர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்படிருந்தன. | உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br><br>இவ் விடயம் தொடர்பாக பிரிவுத் தலைவர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை ஐம்பது (50) ஆகும். அவற்றில் நாற்பத்தெட்டு (48) வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் முகமாக பதிவுச் சான்றிதழ்கள் அமைச்சின் வசம் காணப்படுகின்றது.<br><br>மீதமுள்ள இரண்டு வாகனங்கள், அதாவது அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள KB-7120 எனும் இலக்கமுடைய மோட்டார் கார் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள GW-1326 எனும் இலக்கமுடைய ஜீப் வண்டி ஆகியவற்றை இவ் அமைச்சுக்கு பெயர் மாற்றம் செய்து ஒப்படைப்பதற்கான அனைத்து ஆவணங்களும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை. | அமைச்சின் வாகனங்களில் தேசிய சின்னத்தை வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதியில் அகற்றப்படவில்லை. | 2024.12.18 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2024 இன் பிரகாரம், அரச நிறுவனங்களில் பெரும் நிதிச் சுமையாக விளங்கும் ஆடம்பர வாகனங்களில் அரசாங்க பெருகை செயல் வழி முறையின் பிரகாரம் நீக்கிவிட வேண்டிய மூன்று (03) வாகனங்கள் |

| | |
|---|---|
| | மற்றும் இவ் அமைச்சுக்குரிய வாகனங்களில் முன்னுரிமை அடிப்படையில் பழுது பார்க்க வேண்டியவற்றை தெரிவு செய்யும் குழுவினால் அகற்ற வேண்டியவையாக அடையாளம் காணப்பட்ட மூன்று (03) வாகனங்களை அகற்றிவிடுவதற்கு முன்பு மதிப்பீடு செய்வதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவ் இரண்டு குழுக்களிடமிருந்தும் மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்தவுடன் உரிய வாகனங்கள் அகற்றப்படவுள்ளன. |
| பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகள் 571 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்சமயம் காலாவதியான பொது வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட் தொகுதியினர் ஆட் சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள் | அன்றைய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானத்தின் அடிப்படையில் இவ் அமைச்சுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/CM/24/14 மற்றும் 2025.01.15 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக 568 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்பு செய்வதற்கு இவ் அமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், இதுவரை அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறியதாக ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. |
| **இரண்டாவது பிரிவு** | |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | 2023 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் கீழ் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதற்கான காரணங்கள் பின்வருமாறு,<br><br>i. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் BD/CBP/01/01/04-2022 மற்றும் 2022.04.26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துதல் தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் போனதுடன், ஒரு சில பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையம் நேரிட்டதும். (வெளிப் புற பயிற்சி / சேவை ஆரம்ப பயிற்சி) |
| நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியாளர்/ஒப்புதலளிக்க மறுக்கின்ற/பாதகமான மட்டத்தில் நிலவியது. | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் தகைமைக்குட்பட்ட நிலையில் காணப்படுவதற்கான காரணங்கள்:<br><br>i. சொபாதம் பியச கட்டிடம் அமைந்துள்ள நிலத்தை கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>ii. சொத்துக்களை சட்ட பூர்வமாக கையகப்படுத்துவதற்கும், கையளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, கையகப்படுத்திய பிற்பாடு சொத்துக்களை சொத்துப் பதிவேட்டில் உள்ளீடு |

| | |
|---|---|
| | செய்வதற்கும், கையளித்த பிற்பாடு சொத்துக்களை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.<br><br>**1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான கருத்துரை**<br><br>**1.6.1 கணக்கியல் குறைபாடுகள்**<br><br>(அ) (i) சுற்றாடல் அமைச்சு அமைந்துள்ள சொபாதம் இல்ல கட்டிடம் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 261,000,000 நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் நிதி கூற்றில் வெளிப்படுத்துவதற்கும் காணியை சட்ட ரீதியாக கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்களுடன் காணி கையளிப்பின் போது ஏற்படுகின்ற தாமத நிலைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று கோரப்பட்டிருப்பினும், அதற்கு வாய்ப்பு வழங்கப்படாத நிலையில், இவ் அமைச்சினால் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு (நகர அபிவிருத்தி அமைச்சு உரித்தான) இணைந்து அமைச்சரவைக்கு கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன் வைப்பதற்கு முன்மொழியப்பட்டு, அதற்காக வரைவு செய்யப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் 2026.03.27 ஆந் திகதி போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் இணக்கத்தை பெற்றுக் கொள்ளும் முகமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>இதனடிப்படையில், சொபாதம் பியச கட்டிடம் அமைந்துள்ள நிலத்தை கையகப்படுத்துவதுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தாமதமடைவதற்கு இவ் அமைச்சின் தாமதம் காரணமல்ல என்பதை தெரிவிக்கின்றேன். |
| (ii) அமைச்சின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியில் 2023 நவம்பர் 09 ஆம் திகதி கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்த வாகனம் ஒன்றும், 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் வேறு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 10 வாகனங்களுக்குரிய ரூபா 27,790,000 பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | விலக்கிவிடப்பட்ட இலக்கம் KA-3327 ஐ உடைய ஜீப் வண்டியின் பெறுமதி 2025 நவம்பர் மாதம் சிகாஸ் தொகுதியில் நிதி சார்பற்ற சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.<br><br>உமா ஓய தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த 10 வாகனங்களை நீர்ப்பாசன அமைச்சுக்கு சட்ட பூர்வமாக கையளிக்கும் பொருட்டு பூர்த்தி செய்யப்பட்ட MTA6/8 படிவங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் 2022.04.26 ஆந் திகதியுடையதாக நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை கையகப்படுத்தப்படாத காரணத்தால் மீண்டும் பூர்த்தி செய்யப்பட்ட MTA6/8 படிவங்கள் 2025.11.12 ஆந் திகதியுடையதாக வழங்கப்பட்டிருப்பதுடன், இது வரையும் அவ் வாகனங்களை கையகப்படுத்துவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (iii) தற்சமயம் சுற்றாடல் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 12,400,000 பெறுமதியான 03 வாகனங்கள் சுற்றாடல் | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சுக்கு உரிய இலக்கம் KO-8812 ஐ உடைய மோட்டார் |

| | |
|---|---|
| அமைச்சின் பெயரில் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அப் பெறுமதிகள் 2023 டிசம்பர் 31 திகதியன்று நிதி சாராத சொத்துப் பெறுமதியிலும் உள்ளீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனம் இவ் அமைச்சுக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம் KB-7120 ஐ உடைய மோட்டார் வாகனம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம் GW-1326 ஐ உடைய ஜீப் வண்டி இவ் அமைச்சுக்கு கையகப்படுத்துவதுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| **2. நிதி மதிப்பாய்வு**<br><br>**2.1 செலவு முகாமைத்துவம்** | |
| (அ) 2023 ஆம் ஆண்டுக்காக 02 கருத்திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 122,070,000 இல் நூற்றுக்கு அறுபது வீதத்திற்கும் அதிகமான தொகை செலவிடப்படாமல் எஞ்சியுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | i. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் BD/CBP/01/01/04-2022 மற்றும் 2022.04.26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் காரணமாக நிதி ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.<br><br>ii. கருத்திட்ட செயற் பணிகளை திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்வது தொடர்பாக உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் 06 செலவினத் தலைப்புகளுக்காக ஒதுக்கீடாக பெறப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 17,400,000 இல் ரூபா 2,414,013 ஆன தொகை செலவிடப்படாமல் எஞ்சியிருத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | தேவையின் அடிப்படையில் மாத்திரம் நிதி ஒழுங்கு விதி 66 இன் பிரகாரம் செலவினத் தலைப்புகளை மாற்றி நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ளுமாறு அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |
| (இ) சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டின் வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூபா 150 மில்லியன் வழங்கப்பட்டிருந்த நிலையில், அவ் ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 45 மில்லியன் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் அமைச்சின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் மாற்றீடு செய்யப்பட்டு அத் தொகை 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் மன்றத்தின் 5 ஆவது அமர்விற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. சுற்றாடல் பாதுகாப்பு பணிகளுக்கு நேரடியாக தொடர்பில்லாத குறிப்பிட்ட அவ் அமர்விற்காக சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட | ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் மன்றத்தின் 5 ஆவது அமர்வை இலங்கையில் நடத்துதல் தொடர்பாக வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் கொள்கை அமைச்சரின் அவதானிப்புகளின் அடிப்படையில் சுற்றாடல் அமைச்சுக்கு<br>2023 வருடாந்த பாதீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியங்களின் வாயிலாக<br>முகாமைத்துவப்படுத்துதல்<br>பொருத்தமாகவிருக்குமென<br>அறிவிக்கப்பட்டிருப்பதுடன், 2023.01.27 ஆந் திகதி வெளியிடப்பட்ட செலவுக் கட்டுப்பாட்டு பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் செயற்படாத நிகழ்ச்சிகளின் கீழான நிதியங்கள் இது தொடர்பாக வழங்கப்பட்டன.<br>மானிட வர்க்கம் இந் நாளில் காலநிலை மாற்றம், உயிர்ப் பல் வகைமை வீழ்ச்சி மற்றும் சுற்றுச் சூழல் மாசுபாடு எனும் உலகளாவிய மூன்று |

| | |
|---|---|
| ஒதுக்கீட்டில் சுமார் முப்பது வீதம் செலவிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நெருக்கடிகளையும் எதிர் கொண்டு வருகின்றது. இந் நெருக்கடிகள் சமத்துவமின்மையை அதிகரிப்பதுடன், மானிட வர்க்கத்திற்கு சமச்சீரற்ற வகையில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. எனவே, சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து கூட்டுறவுடன் செயலாற்ற வேண்டியுள்ளது. உலகளாவிய சுற்றுச் சூழல் இலக்குகளை எய்துவதற்கு சர்வதேச இயக்கங்களுடன் கூட்டிணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. அச் சர்வதேச இயக்கங்களுடன் கூட்டிணைந்து அந் நோக்கங்களை நிறைவேற்றுகையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு கருத்திட்டங்களுக்கான மானியங்கள் பெறுதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிக்கான புலமைப்பரிசில் தொகைகளை பெற்றுக் கொள்ளுதல், அறிவியல் அறிவை பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளல் ஆகியன வெளிநாட்டு உதவிகளின் கீழ் நாட்டிற்குக் கிடைக்கின்ற பயன்களாகக் காணப்படுகின்றன.<br>மேற்கூறிய கூட்டம், 2024 ஆம் ஆண்டில் நைரோபி நகரில் நடைபெறவிருந்த ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் மா நாட்டின் 06 ஆவது அமர்வுக்கு பிராந்திய கருத்துகளை முன் வைக்கும் நோக்கத்துடன் பிராந்திய சுற்றுச் சூழல் நிகழ்ச்சி நிரலை விவாதிக்கும் பொருட்டு நடாத்தப்பட்ட அமர்வாகக் காணப்பட்டது. |
| **2.2 பொறுப்புக்கள் மற்றும் கடமைகளுக்கு உட்படுதல்**<br><br>(அ) அமைச்சினால் 2023 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையின் மொத்தத் தொகை ரூபா 19,511,266 ஆக இருந்த போதிலும், திறைசேரியின் அச்சிடல் (CIGAS) மூலம் பெறப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையின் (SA-92) பிரகாரம் மீதி ரூபா 11,485,100 ஆக காணப்பட்டதுடன், அதனடிப்படையில் அமைச்சினால் 2023 டிசம்பர் 31 திகதிக்கு கடமைகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகள் சரியாக அடையாளம் காணப்படாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | <br><br>தற்சமயம் பொறுப்புக்கள் உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட்டு வருகின்றன. |
| **2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காமை**<br><br>(i). இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவை<br><br>நிதிப் பிரமாணம் 104 (1) (4) | <br><br>இலக்கம் CAC-0172 ஐ உடைய ஜீப் வண்டி விபத்துக்குள்ளானது தொடர்பாக நிதி ஒழுங்கு விதி முறை 104(4) இன் கீழ் நடாத்தப்பட்ட விசாரணையின் இறுதி அறிக்கை 2024.07.15 ஆந் திகதி வழங்கப்பட்டிருப்பதுடன், அவ் அறிக்கை 2024.07.22 ஆந் திகதியுடையதாக அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>இலக்கம் KX-7665 ஐ உடைய மோட்டார் வாகனத்தில் இடம் பெற்ற விபத்து தொடர்பாக நியமிக்கப்பட்ட நிதி ஒழுங்கு விதி முறை 104 (04) இன் பிரகாரமான குழுவின் பரிந்துரைகள் 2022.05.17 ஆந் திகதியுடையதாக வழங்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| (ii). திறைசேரி சுற்றறிக்கை<br><br>2017 டிசம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 02/2017 ஐ உடைய திறைசேரி சுற்றறிக்கை | <br><br>நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சுக்குரிய இலக்கம் KO-8812 ஐ உடைய மோட்டார் வாகனம் இவ் அமைச்சுக்கு கையேற்கப்பட்டுள்ளது.<br><br>அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இலக்கம் KB-7120 ஐ உடைய மோட்டார் வாகனம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இலக்கம் GW-1326 ஐ உடைய ஜீப் வண்டி இவ் அமைச்சுக்கு கையகப்படுத்துவது தொடர்பான அனைத்து ஆவணங்களும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் கீழான நடவடிக்கைகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **3. செயற்பாட்டு மதிப்பீடு**<br><br>**3.1 வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டங்கள்**<br><br>**3.1 (அ) காலநிலை மாற்றத்தை தணிக்கும் செயற்திட்ட ஒத்துழைப்பு கருத்திட்டம்** | |
| (i). காலநிலை மாற்றத்தை தணிக்கும் செயற்திட்ட ஒத்துழைப்பு கருத்திட்டத்தின் கீழ் தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதியை நிறுவுவதற்காக ரூபா 31,000,000 பெறுமதியான மொத்த கிரயம் நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்காக மதியுரை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 3,100,000 பெறுமதியான செயலாற்றுகை உத்தரவாதப் பத்திரம் 2024 ஏப்ரல் 12 ஆந் திகதி காலாவதியாகவிருந்த நிலையில், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வண்ணம் அத் தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதியை இயக்குவதற்குத் தேவையான செயலாற்ற மட்டத்தை அடைந்து கொள்ளக் கூடிய வணணம் தேவையான நடவடிக்கைகள் முன்னேடுக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | இத் தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதியின் ஒப்பந்த விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு Deliverable 4, 5, 6 இனது பணிகள் திருப்திகரமாக நிறைவு செய்யப்பட்டிருப்பதாக 2021.04.09 ஆந் திகதி ஒன்று கூடிய அமைச்சின் மதியுரை பெருகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே வேளை Deliverable 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு பராமரிப்புப் பணிகள் உரிய முறையில் நிறைவு செய்யப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>அவ்வாறே, தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதியை நிறுவுவது தொடர்பாக மதியுரை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 3,100,000.00 பெறுமதியான செயலாற்றல் உத்தரவாதப் பிணை, சுற்றாடல் அமைச்சின் கணக்கில் வைப்பிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத் தொகுதி மீண்டும் இயங்கும் நிலைக்கு வந்தவிடத்து அத் தொகையை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவிருந்தன. அதனடிப்படையில், இத் தொகுதியை இயக்கும் நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை தேசிய அங்கீகாரம் பெற்ற அதிகார சபையின் இரண்டாவது தயார் நிலை கருத்திட்டம் (2nd NDA Readiness Project) வாயிலாக பெற்றுக் கொண்டு, இத் தொகுதி தொடர்பான விரிவான பகுப்பாய்வை மேற்கொள்வதற்கும், பயனுள்ள பயன்பாட்டை |

| | |
|---|---|
| | உறுதி செய்யும் நோக்கில் பயனர் ஆற்றல் நிர்மாணிப்புக்காக பணிப் பட்டறைகளை நடாத்துவதன் மூலம் தொகுதி மீளவும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டது. அதன் பிற்பாடு அக் குறித்த தொகை அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. |
| (ii). தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதியை பராமரிப்பதற்காக முதலாம் ஆண்டு (2022) மற்றும் இரண்டாம் ஆண்டு (2023) க்காக ரூபா 1,860,000 பராமரிப்புச் செலவு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 09 ஆந் திகதி வரையிலும் தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதி எதிர்பார்த்தவாறு இயங்கும் நிலையில் இல்லாதிருந்ததாக கணக்கய்வின் போது அவதானிக்கப்பட்டது. | Climate Smart Initiative தனியார் நிறுவனத்தினால் மூன்று ஆண்டுகளுக்கு இத் தொகுதியின் பராமரிப்பு பணிகளுக்காக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் படி அவ் ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலப் பகுதி 2024.02.11 திகதி முடிவடைந்தது. அதன் பிற்பாடு இத் தொகுதியின் பராமரிப்பு பணிகளிலிருந்து குறித்த அந் நிறுவனம் விலகியது. எனினும் அவர்களின் சேவைக் காலத்தில் எழுந்த தொழில்நுட்பக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதும் தொகுதியின் பராமரிப்பு பணிகளை உரிய முறையில் முன்னெடுப்பதும் ஆகிய செயற் பணிகள் அந் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டன. எனவே பராமரிப்பு சேவைக் காலம் முடிவடைந்த பிற்பாடு எழுந்த தொழில்நுட்பக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு குறித்த அத் தொகை செயலாளரின் பரிந்துரையுடன் அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. |
| (iii) காலநிலை மாற்றச் செயலகத்தினால் தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பை நிறுவுவதற்காக தரவு வழங்கும் பங்குதாரர் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருந்த நிலையில், 55 தரவு வழங்குநர் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தும், அவற்றில் 08 நிறுவனங்களுடன் மட்டுமே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருந்தன. | முதலாவதாக, அப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் பொருந்துமாறு தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும், அவ் இரண்டு ஆண்டு கால முடிவில், அந் நிறுவனங்கள் மீண்டும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு முன்னர், நிறுவனங்களினால் மாற்றத்துக்குள்ளான மைய நிலையங்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடாத்துமாறு கோரப்பட்டதன் அடிப்படையில், 2024 டிசம்பர் மாதம் அம் மீள் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டதுடன், அவ் அலுவலர்களின் சிக்கல்கள் மற்றும் முன் மொழிவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதில், இத் தொகுதியை அபிவிருத்தி நிலையின் கீழ், ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்பட வேண்டிய அளவுருக்களை மீண்டும் செல்லுபடியாக்குமாறு கலந்துரையாடப்பட்டது. இதனடிப்படையில், இவ் அளவுருக்களை மீண்டும் செல்லுபடியாக்கி, புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தை நீட்டித்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (iv) தரவுப் பரிமாற்ற வலையமைப்பு தொகுதி தொடர்பாக தரவு வழங்கும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு முன்னரே தொடர்புடைய நிறுவனங்களுக்கு கணினி இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இக் கருத்திட்டம் 2021 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. அதே போன்று அக் கணினிகளை இத் தரவு சேகரிப்புக்கு மாத்திரம் பயன்படுத்துமாறும், உரிய முறையில் தரவுகளை தொகுதியினுள் உள்ளீடு செய்யுமாறும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. |
| (v) 2021 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட 04 புரிந்துணர்வு | இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் நடைமுறையில் நிலவுமாறு நிர்ணயிக்கப்பட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் காலம் முடிவடைந்து, மீண்டும் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு முன்னர், |

| | |
|---|---|
| ஒப்பந்தங்கள் கணக்காய்வு திகதியளவில் காலாவதியாகியிருந்தன. | நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மாற்றப்பட்ட மையப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடத்துவது தொடர்பாகவும், அவ் அலுவலர்களின் சிக்கல்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாகவும் 2024 டிசம்பர் மாதம் விவாதிக்கப்பட்டது. அதன் போது அளவுருக்கள் மீண்டும் சரிபார்க்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் காலம் நீட்டிக்கப்பட்டு நிறுவனங்களுடன் மீளவும் ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதனடிப்படையில், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (vi) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் ‘‘d’’ எனும் விடயத்தின் அடிப்படையில் சுற்றாடல் அமைச்சினால் தரவு வழங்கும் நிறுவனங்களுக்கு தரவு வலையமைப்பிற்கான அணுகல் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய பங்குதாரர் நிறுவனங்களுக்கு அனுமதி அணுகல் (Authorization Access) வழங்கப்படாதிருந்தமை தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | இன்றளவில் மீளவும் நியமிக்கப்பட்ட அனைத்து மையப் பொறுப்பாளர்களுக்கும் அணுகல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| (vii) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2 ஆவது பிரிவின் ‘‘e’’ விடயத்தின் பிரகாரம், தரவு வழங்கும் நிறுவனத்தினால் சரியான, நம்பகமான மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க தரவுகளை தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவு பரிமாற்ற வலையமைப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய நிறுவனங்களினால் கணக்காய்வு திகதி வரையிலும் தரவுப் பரிமாற்ற வலையமைப்பிற்கு தரவுகள் அனுப்பி வைக்கப்படாதிருந்தமை தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | காலநிலை மாற்றச் செயலகத்தில் இத் தொகுதி தொடர்பான பயிற்சி மற்றும் தேர்ச்சி பெற்றிருந்த அலுவலர் சனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமையால், அவ் அலுவலரை விடுவிப்பதற்கு முன்பு இப் பிரிவின் கீழான பிற மூன்று அலுவலர்களுக்கு பயிற்சி மற்றும் தேர்ச்சி வழங்கப்பட்டு இத் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தி பராமரிக்கும் செயல் வழி முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (viii) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் தரவு வழங்கும் நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் காலத்திற்கேற்ப மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் பங்குதாரர் நிறுவனத்துடன் ஒருங்கிணைத்து தேவையான மதிப்பீடு மேற்கொண்டு உரிய முறையில் ஒப்பந்தத்தை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2024 டிசம்பர் மாதம் அனைத்து மைய நிலையங்களுக்கும் பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டன. அவ்வாறே, அவர்களுடன் கலந்துரையாடி, ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்பட வேண்டிய தரவுகளை செல்லுபடியாக்கி, மீண்டும் குறித்த காலப் பகுதியை நீட்டித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ix) 2021 நவம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவில் இக் கருத்திட்டத்தின் விருத்தி நிலை | இத் தொகுதியை இயங்கும் முறைமையாக பேணிப் பாதுகாக்கும் முகமாக, பங்குதார நிறுவனங்களினால் தொடர்புடைய தரவுகளை தொகுதியினுள் உள்ளீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | |
|---|---|
| திருப்திகரமான நிலையில் காணப்படுவதில்லையென குறித்த குழுவினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. தொடர்புடைய பிரிவுகளுடன் சரியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தும் செயல் முறை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதும், இத் தொகுதியை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் தேவையும் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனும் விடயம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்படுதல் வேண்டும். எனினும், குறைந்த ஊழியர் எண்ணிக்கையின் கீழ் தொடர்புடைய பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், அக் குறித்த அலுவலர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதாலும், புதிதாக நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு தொகுதி தொடர்பான அறிவுத் திறனை வழங்கும் முகமாகவும் மீண்டும் மீண்டும் பயிற்சி அமர்வுகளை நடாத்த வேண்டியிருப்பதாலும், சில தரவுகளை பகுப்பாய்வு செய்து இரண்டாம் நிலை தரவுகளாக தொகுதியினுள் உள்ளீடு செய்ய வேண்டியிருப்பதாலும், தரவுகளை தொகுதியினுள் உள்ளீடு செய்வதில் ஒரு சில தாமதங்கள் காணப்பட்டாலும், இத் தொகுதியை இயங்கும் தொகுதியாக பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (x) மேற்கூறிய அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவில் தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவு பரிமாற்ற வலையமைப்பு தொகுதியை இற்றைப்படுத்தி அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவை அறிவூட்டுமாறு அமைச்சின் பிரதான கணக்கு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் தரவு தொகுதியை இற்றைப்படுத்தி அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவை அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிலவுகின்ற குறைந்த ஊழியர் எண்ணிக்கையின் கீழ் தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சில தாமத நிலைகள் காணப்பட்ட போதிலும், இவ் ஆண்டில் இத் தொகுதியை இயங்கும் தொகுதியாக மாற்றுவதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **3.1 (ஆ) சுகாதாரமான நிலத் தோற்ற கருத்திட்டம்** | |
| (i). சுகாதார மிக்க நிலத் தோற்ற கருத்திட்டத்தின் கீழ் தும்பிக் குளம் குளத்தை புனரமைப்பது தொடர்பாக 2022 ஜனவரி 26 ஆந் திகதி பளுகஸ் வெவ பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், வன பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலர்களினால் வன சீவராசிகளின் பயன்பாட்டிற்காக இக் குளத்தை கலிங்கல் இல்லாமல் புனரமைப்பதற்கு வாய் வழியாக இசைவு வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், இக் குளத்தை கலிங்கல் இன்றி கட்டுவிப்பதற்கு இசைவு பெறப்பட்டிருந்த நிலையில், சுகாதாரமிக்க நிலத் தோற்ற கருத்திட்டத்தின் கீழ் தும்பிக்குளம் குளத்தில் ரூபா 1,541,477 ஆன செலவில் கலிங்கல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு ஆய்வின் அடிப்படையில் அவதானிக்கப்பட்டது. | இன்றளவில், அனுமதி பெற வேண்டிய அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் எழுத்து மூல அனுமதி பெற்று கருத்திட்டப் பணிகளை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| (ii) சுமார் ரூபா 51.56 மில்லியன் நிதிச் செலவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக நீர் பெறும் நோக்கில் தும்பிக்குளம் குளம் புனரமைக்கப்பட்டிருந்த நிலையில், அக் குளத்திலிருந்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக நீர் திறந்து விடும் திறன் இல்லாதிருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன், குளத்தின் நீரொழுகு நிலை நீர் அடுக்கடுக்கான நீரோட்டத் தொகுதியின் தாழ்வாக அமைந்துள்ள வயல்களை நோக்கி பாய்ந்து செல்லக் கூடிய வகையில் கால்வாய் வழிகளை மறு சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | சுகாதார மிக்க நிலத் தோற்ற கருத்திட்டத்தின் நோக்கங்கள் எய்தப் பெறும் வகையில் தொடர்புடைய பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| (iii) 2009 ஆம் ஆண்டின் இலக்கம் 65 ஐ உடைய வன திருத்தச் சட்டத்தின் 7.(ஔ) 2009 ஆம் ஆண்டின் இலக்கம் 65 தாங்கிய காடு திருத்தச் சட்டத்தின் 7.1 (ஓ) பிரிவின் படி எந்தவொரு பாதையையும் அமைப்பது, ஏற்கனவே அமைக்கப்பட்ட எந்தவொரு பாதையையும் மாற்றுவது, அவ்வாறு அமைக்கப்பட்ட பாதையை பயன்படுத்துவது ஆகியவை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் தடை செய்யப்பட்ட செயல்களாக குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், சுகாதாரமிக்க நிலத் தோற்ற கருத்திட்டத்தின் செலவின மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 2,107,933 ஆன செலவில் சுற்றுலாத் துறை பாதையொன்று அமைக்கப்பட்டிருந்தும், இக் கருத்திட்டப் பகுதி தும்பிக்குளம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அது வனச் சட்டத்திற்கு முரணான செயலென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இக் குளத்தை நிலை நிறுத்துவதுடன் தொடர்புடைய தொழில்நுட்ப பிரதி நிதி நிறுவனமான கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு தொடர்புடைய அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் குளத்தை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கலிங்கல் எனப்படுவது குளத்தின் முக்கிய அங்கமாகும். கடந்த வறட்சிக் கால கட்டத்தில் அடுக்கடுக்கான நீரோட்ட வழியின் தாழ் பகுதியில் உள்ள குளங்களுக்கு நீரை வழங்கி, வறட்சியினால் பாதிக்கப்படும் அபாயத்தில் நிலவிய பல ஏக்கர் வயல் நிலங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டது இக் கலிங்கல் வழியாக பெறப்பட்ட நீரை குளத்தின் அணை உடைவதற்கு முன்பு நீர் வடிகால் பாதை வழியாக கீழே உள்ள குளங்களுக்கு கொண்டு சென்றதன் வாயிலாகவாகும். இக் குளத்தை புனரமைப்பதற்காக வன பாதுகாப்பு திணைக்களத்தினால் 2024.09.20 ஆந் திகதி எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகையில் சட்டங்கள் மற்றும் பிற சட்ட ரீதியான நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட பிற்பாடே எதிர்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |
| (iv) தும்பிக்குளம் குளம் புனரமைப்பு தொடர்பான ஒப்பந்த வெளியீடுகளாக ஏக்கர் 200 வயல் நிலங்களின் பயிர்ச் செய்கை மற்றும் சுற்றாடல் தொகுதி மீட்டெடுப்பு ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய இலக்கம் 1821/34 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பின் மூலம் தும்பிக்குளம் குளம் மற்றும் அதனை சூழ்ந்த ஒரு சில பகுதிகள் உள்ளடங்கிய மொத்த நிலப் பரப்பான சுமார் 2,744 ஹெக்டயார் தும்பிக்குளம் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கு உரித்தானதென பெயரிடப்பட்டிருந்தமையால், அக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கை | மேற்கூறிய பிரதேசத்தில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரின் தலைமையில் வன பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அத் திணைக்களத்தின் அலுவலர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலர்களினால் களத் திடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தற்போது இது தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்களிடம் வாய் மொழி வாயிலாக விசாரித்த போது அறிவிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| மேற்கொள்ள முடியாதென சுட்டிக் காட்டப்பட்டதுடன், சுகாதாரமிக்க நிலத் தோற்ற கருத்திட்டத்தின் கீழ் மேற்கூறிய ஒப்பந்தத்தின் கீழ் சட்ட ரீதியாக அடைய முடியாத வெளியீடுகள் குறிப்பிடப்பட்டிருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.<br><br>**3.2 பெருகைகள்** | |
| (அ) ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் மன்றத்தின் 5 ஆவது அமர்வில் பங்கேற்ற அலுவலர்களுக்கு உணவு வழங்குவது தொடர்பான விலை கோரலுக்காக 03 நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகள் சுற்றாடல் அமைச்சின் விலை மனு கோரல் குழு உறுப்பினர்களினால் திறக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் விலைகளில் திகதி முத்திரையிடப்பட்டு கையெழுத்திடப்படாதிருந்ததுடன், அதற்குரிய விலை மனு திறப்பு குழு அறிக்கையும் இல்லாதிருந்ததாக ஆவண பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.<br>இதனடிப்படையில், ஏலம் திறக்கும் நடைமுறையின் செம்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படாத நிலையில், தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையும் பெருகை வழிகாட்டுதலின் 2.11.3 இன் பிரகாரம் உரிய வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. | தற்சமயம் பெருகை வழிகாட்டுதல் தொகுப்பிற்கு அமைவாக பெருகை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. |
| (ஆ) 2023 செப்டம்பர் 27 ஆந் திகதி ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் மன்றத்தின் 5 ஆவது அமர்வில் பங்கேற்ற அலுவலர்களுக்கு உணவு வழங்குவது தொடர்பான பெருகையுடன் தொடர்புடைய பெருகை குழுவினால் தீர்மானம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் Lavinia Bakers இடமிருந்து சேவை பெறுவதற்கும், ஒரு உணவு வேளைக்கு 200 உணவுப் பொட்டலங்களாகவும் மொத்தமாக 3712 உணவுப் பொட்டலங்கள் வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன், தேவையின் அடிப்படையில் தேவையான உணவுப் பொட்டலங்களின் எண்ணிக்கையை கட்டளையிடுவதற்கும், அவ் எண்ணிக்கையை மீறுமாயின் மீண்டும் பெருகை குழுவின் அனுமதிக்கு உட்பட்டு அதனை பெற்றுக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.<br>எனினும், இம் மாநாட்டிற்காக 8423 உணவுப் பொட்டலங்கள், அதாவது மேற்கூறிய விலை கோரப்பட்டிருந்த 3712 உணவுப் பொட்டலங்களுக்கு | இம் மாநாடு நடைபெறும் போது வாகன கடமையில் ஈடுபட்ட 105 அலுவலர்கள், சிறப்பு பணிப் படையின் மேலதிக 30 அலுவலர்கள், அனைத்து பாதுகாப்பு, வாகன, புலனாய்வு, கலவர ஒடுக்கம் மற்றும் அதிகாரப் பூர்வமான நாய்களை உள்ளடக்கிய பிரிவு அலுவலர்கள் ஆகியோர் சேவை பகிர்வு முறைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமையால் ஒரு சேவை பகிர்வு முறைக்கு 235 உணவுப் பொட்டலங்கள் வீதம் உணவுப் பொட்டலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நேரிட்டது. அமைச்சர் பாதுகாப்பு பிரிவிற்கும் கோரிக்கையினடிப்படையில் அவ்வப் போது அதிக அளவில் உணவுப் பொட்டலங்களை வழங்க நேரிட்டது. திட்டமிடப்பட்டதை விட அதிகமான உணவுப் பொட்டலங்களை மாநாடு நடைபெறும் போது வழங்க நேரிட்டதன் காரணமாக உணவு வழங்குவதற்காக அதிகமாக செலவிட நேரிட்டது. இவ்வாறு நேர்ந்தது பாதுகாப்பு காரணங்களுக்காக முன் கூட்டிய அறிவிப்பின்றி தொடர்புடைய நாளன்று காலையில் அல்லது எந்தவொரு கடமையும் ஒப்படைக்கப்பட்ட உடனேயே இணைப்பு செய்யப்பட்ட பாதுகாப்பு பிரிவிற்கும் தேவையான உணவுத் தேவை நிவர்த்தி செய்யப்பட்டமையேயாகும். மேலும் அரச தலைவர் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதி இந் |

| | |
|---|---|
| மேலதிகமாக 4711 உணவுப் பொட்டலங்கள் பெருகை செய்யப்பட்டிருந்தன. இதனடிப்படையில் பெருகைக்கு அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கையை விட நூற்றுக்கு 127 வீதம் அதிகமான உணவுப் பொட்டலங்கள் பெருகை செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய விடயங்களினடிப்படையில், இம் மாநாட்டிற்கு தேவையான உணவு வழங்குவதற்காக ரூபா 2,422,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் இதற்காக ரூபா 4,443,970.00 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், உணவு வழங்குவதற்காக எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட ரூபா 2,021,970.00 அதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | நாட்டிற்கு வருகை தருவது ஒரே நாளில் இடம் பெறாமையும் இதற்கு எதுவாக அமைந்தது. தற்போது நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு திட்டமிட்டு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |
| (இ) ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் மன்றத்தின் 5 ஆவது அமர்வில் பங்கேற்ற அலுவலர்களுக்கு உணவு வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட Lavinia Bakers நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,443,970.00 ஆன தொகைக்கான காசோலையை Testa Bake House (Pvt) Ltd நிறுவனத்தின் ரீ.ஏ.பி. ரஞ்சித் என்பவரின் தனிப்பட்ட பெயரில் வழங்குமாறு Lavinia Bakers நிறுவனத்தினால் கோரப்பட்டிருந்ததுடன், அதனடிப்படையில் அமைச்சினால் ரீ.ஏ.பி. ரஞ்சித் என்ற தனி நபர் பெயரில் காசோலை வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயங்களினடிப்படையில் உணவு வழங்கும் சேவையை மேற்கொண்ட Lavinia Bakers நிறுவனத்தின் பெயரில் காசோலையை வழங்காமல் ரூபா 4,443,970.00 ஆன தொகைக்காக ரீ.ஏ.பி. ரஞ்சித் என்ற தனி நபர் பெயரில் பணத்தை வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உணவு வழங்குவதற்காக Lavinia Bakers நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதுடன், அந் நிறுவனம் ரீ.ஏ.டி. ரஞ்சித் எனும் பெயரில் காசோலை வழங்குமாறு விலைப் பட்டியலில் குறிப்பிட்டிருந்தமையால் அப் பெயரின் கீழ் காசோலை வழங்கப்பட்டது. |
| **3.3 சொத்து முகாமைத்துவம்** | |
| (அ). சுற்றாடல் அமைச்சுக்குரிய வாகனங்களில் இயக்க முடியாத நிலையில் காணப்படும் 05 வாகனங்கள் அமைச்சு வளாகத்திலும், வாகன திருத்துமிடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதுடன், இவ் வாகனங்கள் 03 முதல் 09 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும், அவற்றின் பழுது பார்ப்புப் பணிகளை | இயக்க நிலையில் காணப்பட்டு விலக்கிவிட வேண்டியனவாக அடையாளம் காணப்பட்ட அமைச்சுக்குரிய பின்வரும் இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் 2025.06.12 ஆந் திகதி பாவனையிலிருந்து விலக்கிவிடப்பட்டுள்ளன.<br><br>HK-8894 ஐ உடைய டபல் கெப் வண்டி<br>KH-9235 ஐ உடைய ஜீப் வண்டி<br>KK-9635 ஐ உடைய மோட்டார் வாகனம் |

| | |
|---|---|
| மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | இலக்கம் 65-1578 ஐ உடைய ஜீப் வண்டி மற்றும் KB-7120 ஐ உடைய மோட்டார் வாகனம் பழுதுபார்க்கப்பட்டு தற்போது உத்தியோகபூர்வ பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) 2022 ஜனவரி 25 ஆந் திகதிய இலக்கம் 04/2022 ஐ உடைய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 (அ) பிரிவின் பிரகாரம், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் கம்ப்ட்ரோலர் ஜெனரல் காரியாலயத்திற்கு அறிக்கையிடப்பட்ட இயக்க நிலையில் இல்லாத மற்றும் பழுது பார்ப்பும் பயனற்ற வாகனங்களை விலக்கிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால், சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 இன் 02 (அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி அத்தகைய வாகனங்களை விலக்கிவிடும் செயல் முறையை உடனடியாக நிறைவு செய்ய வேண்டியிருந்த போதிலும், அமைச்சுக்குரிய 02 வாகனங்களை 2020 டிசம்பர் 31 ஆந் திகதி விலக்கிவிடுமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தன. கம்ப்ட்ரோலர் ஜெனரலின் 2023 மார்ச் 09 ஆந் திகதிய இலக்கம் CGO/ASM/Environment/General/21-1 ஐ உடைய கடிதத்தின் மூலம் மேலும் ஒரு வாகனத்தை விலக்கிவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையும் அமைச்சு அதனடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | இலக்கம் 65-1578 ஐ உடைய ஜீப் வண்டி அமைச்சில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பழுதுபார்க்கப்பட்டு இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.<br><br>இலக்கம் KH-9235 ஐ உடைய மோட்டார் வாகனம் 2025.06.12 ஆந் திகதி பாவனையிலிருந்து விலக்கிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>யுனைடெட் மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு பழுதுபார்ப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த இலக்கம் HQ-4331 ஐ உடைய ஜீப் வண்டியை பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக இல்லாத காரணத்தால் அதனை பாவனையிலிருந்து விலக்கிவிடும் பொருட்டு தற்சமயம் மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (இ) சுற்றாடல் அமைச்சின் அமைச்சர் பணிக் குழுவிற்கு இணைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீளப் பெறும் தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கவனிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:<br><br>• மோட்டார் வாகனத்தின் உடலைச் சுற்றிலும் நொறுங்கல்களும், கீறல்களும் காணப்பட்டன<br>• டெயில் லாம்ப், ரிவர்ஸ் லாம்ப், பிரேக் லாம்ப் ஆகியவை உடைந்திருந்தன<br>• முன்புற வாகன இலக்கத் தகடு இல்லாதிருந்தது<br>• மோட்டார் வாகனத்தின் உடல், கூரை மற்றும் பிற இடங்களில் கீறல், நொறுங்கல் மற்றும் டேஷ் போர்ட் உடைந்து சிதறியிருந்தது<br>• ஏ சீ வெளிப்படும் வாயில்கள் காணாமல் போயிருந்தன | KS-7955 மோட்டார் வாகனம் - அமைச்சர் பணிக் குழுவிற்கு இணைக்கப்பட்டிருந்த இம் மோட்டார் வாகனம் மீளப் பெறும் தருணத்தில் வாகனத்தில் இடம் பெற்றிருந்த இழப்புகள் சம்பந்தமான பழுதுபார்ப்பிற்காக செலவிடப்பட்ட தொகையை அம் மோட்டார் வாகனம் இணைக்கப்பட்டிருந்த அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>KY-4966 மோட்டார் வாகனம் - அமைச்சர் பணிக் குழுவிற்கு இணைக்கப்பட்டிருந்த இம் மோட்டார் வாகனம் மீள் கையளிக்கப்படுகையில் அவ் வாகனத்தின் வெளிப் புற உடலில் சுற்றிலும் காணப்பட்ட கீறல்கள் மற்றும் நொறுக்கல்களுக்கான பழுது பார்ப்புகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படாத காரணத்தால் அதற்காக செலவு ஏற்படவில்லை.<br><br>வாகனங்களை மீளவும் கையளிக்கையில் அவ் வாகனங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் இன்றளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| • முன்புற பிரதான கண்ணாடி (windscreen) வெடித்திருந்தது<br>• இடது மற்றும் வலது பக்க Tail Light உடைந்திருந்தன<br><br>மேற்கூறிய இழப்புகள் தொடர்பில் குறித்த தருணத்தில் அமைச்சு அறிவூட்டப்படாதிருந்தமையால் அக் குறித்த சேதங்களை பழுதுபார்த்து காப்புறுதி இழப்பீட்டின் ஊடாக அவ் இழப்புகளை ஈடு செய்து கொள்ள முடியாமல் போயிருந்தமை தொடர்பாக அவதானிக்கப்பட்டது. | |
| (ஈ) 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆந் திகதி வெளியிடப்பட்ட பெருகை நடைமுறை கையேட்டின் 38 ஆவது மேலதிக இணைப்பின் பிரகாரம், பெருகை வழிகாட்டுதல் இலக்கம் 9.3.1 (அ) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, வாகன பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான விலை கோரல்கள் பொருளாதார ரீதியில் சாதகமற்றவை என்பதை கருத்திற் கொண்டு, அவ் வாகனங்களின் உள்நாட்டு முகவர் நிலையங்கள் மூலம் சேவைகளை மேற்கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில், வாகன சேவைகளுக்கு, முன்பு நடைமுறையில் இருந்த செயல் வழி முறைக்கு மாறாக, வாகன முகவர்கள் மூலம் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையில், 41 வாகனங்களுக்கு 81 சேவை தடவைகளுக்காக மொத்தமாக ரூபா 6,360,496 ஆன மொத்த செலவு பதிவாகியுள்ளது. எனினும், இம் முகவர் சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு பொருளாதார ரீதியில் சாதகமானதா என்பதை கணக்கீட்டின் போது உறுதிப்படுத்த இயலவில்லை. | வாகன தவணை சேவைகளை மேற்கொள்வதற்காக குறித்த வாகனத்தை உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு அனுப்பும் தருணத்தில், அப்போது இனங் காணப்படும் சிறிய பழுது பார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அதற்கான செலவும் ஏற்கப்பட்டுள்ளது. |
| (உ) தேசிய காலநிலை மாற்றத் தரவு பகிர்வு வலையமைப்பு தொகுதிக்கு (National Climate Change Data Sharing Network) தரவு வழங்கும் பங்குதார நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக ரூபா 12,446,500 (VAT நீங்கலாக) செலவில் 55 மேசைக் கணினிகள் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், இக் கணினிகள் 55 பங்குதார நிறுவனங்களுக்கு கொள்வனவு செய்த திகதியிலிருந்து 14 மாதங்களுக்குப் பின்பே வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வின் போது மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 27 பங்குதார நிறுவனங்களில், 20 பங்குதார நிறுவனங்கள் இம் மேசைக் கணினிகளை தேசிய காலநிலை மாற்ற தரவுப் பகிர்வு வலையமைப்பிற்கு தரவு தொகுப்பதற்கோ | 2024.03.18 ஆந் திகதி, குறித்த கணினிகள் இத் தரவு சேகரிப்பு பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனையும், தரவுகள் முறையான முறையில் தொகுதியினுள் உள்ளீடு செய்யப்பட வேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| அல்லது தொடர்புடைய தரவு செயலாக்கத்திற்கோ பயன்படுத்தவில்லை என கண்டறியப்பட்டது. மேலும், ஒரு பங்குதார நிறுவனம் கணினியை பயன்படுத்தாமல் களஞ்சியசாலையிலேயே வைத்திருந்ததுடன், அந் நிறுவனத்திற்கு அக் கணினி தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி, தேவைப்பாட்டை முறையாக இனங் காணாமல் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என கவனிக்கப்பட்டதுடன், இக் கணினிகள் கொள்வனவு செய்வதன் மூலம் எட்டிட விரும்பிய நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | |
| (ஊ) தேசிய காலநிலை மாற்றத் தரவு பகிர்வு வலையமைப்பு தொகுதிக்காக ரூபா 1,065,000 (VAT நீங்கலாக) செலவில் 05 மடிக் கணினிகள் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட பௌதீக எண்ணிக்கை கணக்கெடுப்பு பரிசோதனையின் போது, இவ் 05 மடிக் கணினிகளில் 02 கணினிகள் அமைச்சின் நிதிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய 03 மடிக் கணினிகள் காலநிலை மாற்றப் பிரிவில் இயங்காத நிலையில் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. | 03 மடிக் கணினிகள் செயற்பாட்டு நிலையில் இல்லாத காரணத்தால், அக் கணினிகளை களஞ்சியத்திலிருந்து வெளியகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| **3.4 பொருளாதார சிக்கனமற்ற பரிவர்த்தனைகள்** | |
| 2013 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளான ஒரு வாகனம், 10 வருடங்களுக்கும் மேலாக பழுது பார்ப்பின்றி தனியார் வாகன பழுதுபார்ப்பு நிலையமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பிற்பாடு 2023 ஆம் ஆண்டு அவ் வாகனம் ரூபா 1,800,000 க்கு கையிருப்பிலிருந்து வெளி நீக்கம் செய்யப்பட்டது. குறித்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (4) இன் கீழ் விசாரணை நடாத்தி, பழுது பார்ப்பு செலவினங்களை எவ்வாறு மீட்டெடுக்க வேண்டும் எனும் விடயம் முறையாக தீர்மானிக்கப்படாமையால், வெளியகற்றலின் மூலம் கிடைத்த தொகையிலிருந்து ரூபா 1,614,105 ஆன தொகை விபத்து பழுது பார்ப்பு செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டு, எஞ்சிய ரூபா 185,895 ஆன தொகை மாத்திரமே திறைசேரிக்கு (பொதுச்செலவு நிதியம்) செலுத்தப்பட்டது.<br>இதன் விளைவாக, அரசுக்கு ரூபா 1,614,105 ஆன இழப்பு ஏற்பட்டுள்ளது என கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. | இலக்கம் KA-3327 ஐ உடைய ஜீப் வண்டி விபத்துக்குள்ளானது தொடர்பாக, நி.பி. 104 (4) அறிக்கையின் மூலம் வாகன ஓட்டுனரை குற்றவாளியென தீர்மானிக்க இயலாது என முடிவு செய்யப்பட்டுள்ளதால், வாகனத்தின் இழப்பு அவரிடமிருந்து அறவிடப்படவில்லை. |

| | |
|---|---|
| **3.5 முகாமைத்துவ நலிவுகள்** | |
| (அ). மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பிளாஸ்டிக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ரூபா 14,531,330 தொகை சுற்றாடல் அமைச்சுக்கு செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 10 வருடங்களுக்கு அதிகமாக காலத்திற்கு முன்னர் அமுல்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் மீண்டும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 14,531,330 தொகையை அறவிடுதல் தொடர்பாக சுற்றாடல் அமைச்சினால் போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 14,531,330 ஆன தொகை, 2024.08.06 ஆந் திகதி பற்றுச் சீட்டு இலக்கம் R/24/550679 இன் மூலம் சுற்றாடல் அமைச்சிற்கு செலுத்தப்பட்டிருப்பதுடன், அத் தொகை 2024.08.07 ஆந் திகதி அரசாங்க வருவாயில் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ). அமைச்சரவை பத்திர இலக்கம் 23/1739/622/021 ஆன “ஐக்கிய அரபு இராச்சிய அரசின் டுபாய் நகரத்தில் நடைபெற்ற காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒன்றிணைந்த மாநாட்டில் 28 பங்குதாரர்களின் மாநாடு” என்ற தலைப்பில் சுற்றாடல் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 செப்தெம்பர் மாதம் 07 திகதிய குறிப்பிற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு தேசிய கொள்கைகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்பில் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு சுற்றுலா தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த வரையறையின் காரணமாக மேற்கூறப்பட்ட மாநாட்டிற்காக அத்தியவசியமான மற்றும் ஆகக் குறைந்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை பங்குபற்றுதல் பொருத்தமாக இருந்தது எனவும் அந்த உத்தியோகத்தர் குழாம் குறித்துரைத்த ரீதியில் பெயரிடப்பட்டதன் பின்னர் சனாதிபதி செயலாளரின் முன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அமைச்சில் மேலும் 06 உத்தியோகத்தர்கள் இந்த மாநாட்டிற்காக பங்குபற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்கள் மாநாட்டுக்கு பங்குபற்றுவதற்காக சனாபதி | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் வாயிலாக வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், வெளி நாட்டுப் பயணங்கள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| செயலகத்தின் முன் இணக்கப்பாடு பெறப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும் அந்த 06 உத்தியோகத்தர்களுக்கு இடையில் மூன்று உத்தியோகத்தர்கள் சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதார பிரிவில் நியமிக்கப்பட்டு செயற்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்கள் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டிற்காக பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டதன் முன்னுரிமை அடிப்படையில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்பாக “மாநாடு முடிவடைந்த பின்னர் இலங்கைக்காக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.” என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | |
| (இ). சுற்றாடல் அமைச்சர் மற்றும் பதவியணியினருக்கு 2023 ஒக்தோபர் 24 ஆந் திகதி அமைச்சினால் 07 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கு மேலதிகமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சுக்குச் சொந்தமான 04 குழாம் வாகனங்களும் அமைச்சு பதவியணியினரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2023 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் 2024 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் மேலே குறிப்பிடப்பட்ட 04 வாகனங்களையும் பயன்படுத்தி 16,950 கிலோ மீற்றர் ஓடியிருந்ததுடன் இதற்கான எரிபொருள் (டீசல்) லீற்றர் 2,366 அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சுற்றறிக்கையின் படி அமைச்சருக்கும் அமைச்சு பதவியணியினருக்கும் வழங்கக் கூடியதாக இருந்த எரிபொருள் அளவை விஞ்சி அவ்வப்போது வழங்கப்பட்ட 04 வாகனங்களுக்காக எரிபொருள் லீற்றர் 2,366 வழங்குவதற்கு அமைச்சு ரூபா 831,412 தொகையை செலவிட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | சனாதிபதி அலுவலகத்தினால் 2025 ஜனவரி 21 ஆந் திகதியிடப்பட்டதாக வெளியிடப்பட்ட இலக்கம் PS/CSA/00/1/4/12 இன் பிரகாரம், கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அப் பணிக் குழுவிற்கு வாகனங்களை இணைக்கும் செயல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ). அமைச்சரவை பத்திர இலக்கம் 20/1399/301/006 மற்றும் 2020 செப்தெம்பர் 17 ஆந் திகதிய | சுற்றாடல் அமைச்சரின் ஆலோசகர் பதவிக்கான நியமனம், அமைச்சரின் அறிவிப்பின் படி இலக்கம் ps/cm/gpa/41/2020 ஐ உடைய அமைச்சரவை |

| | |
|---|---|
| அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ள தகவல்களுக்கு முரணாக அமைச்சு செயலாளரினால் முன்னாள் சுற்றாடல் அமைச்சரின் ஆலோசனைக்காக 2023 நவம்பர் 15 ஆம் திகதி தேரர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அத்துடன், 2023 நவம்பர் 15 ஆந் திகதி முதல் 2024 பெப்ரவரி 03 ஆந் திகதி வரை இவ் ஆலோசகர் தேரருக்கு ஆலோசக சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளாக ரூபா 484,331 ஆன தொகை வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.<br>குறித்த ஆலோசகர் தேரருக்கான ஆலோசக பதவிக்கான நியமன கடிதம் 2023 நவம்பர் 15 ஆந் திகதி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரின் அறிவுறுத்தலின் படி தனிப்பட்ட செயலாளரினால் அனுப்பப்பட்ட கடிதமொன்றின் பிரகாரம், நியமனத் திகதி 2023 ஒக்டோபர் 24 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட ஆலோசகர் தேரரின் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.<br>இதனடிப்படையில், அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, 2023 ஒக்டோபர் 24 ஆந் திகதி முதல் 2023 நவம்பர் 15 ஆந் திகதி வரையான முறையான நியமன கடிதம் இல்லாத 23 நாட்களுக்கான ஆலோசக சம்பளமாக ரூபா 74,194 மற்றும் பிற கொடுப்பனவுகளாக ரூபா 4,452 ஆன தொகையுமாக மொத்தமாக ரூபா 78,646 ஆன தொகை அமைச்சு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | விஞ்ஞாபனத்தின் பரிந்துரைகளுக்கு உட்பட்டு, தேரரின் தொழில் சார் மற்றும் கல்வித் தகைமைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேரர் தேசிய கற்பித்தல் டிப்ளோமா, கல்வி டிப்ளோமா மற்றும் கலைத் துறை இள நிலைப் பட்டத்துடன் முது நிலைப் பட்டமும் பெற்றுள்ளார். அரசாங்கப் பாடசாலையில் ஆசிரியர் சேவையில் 1 ஆம் தரத்திலும், வலய கல்வி அலுவலகத்தில் உதவி பணிப்பாளராகவும் அரசாங்க நிர்வாகத் தரத்தில் 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் சேவையிலும் ஈடுபட்டுள்ளார். மேலும் வெகுசன ஊடக அமைச்சின் ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், வானொலி கூட்டுத்தாபனம், சுதந்திர தொலைக்காட்சி ஆகிய அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், மத்திய மாகாண சபையின் ஊடக அமைச்சின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பலவேறு பதவிகளை வகித்துள்ளார். அத்துடன் மத்திய மாகாணத்தின் நனோதா தொழிற்சார் கல்வி நிறுவனத்தில் நெறிமுறைப் பொறுப்பு ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். எனவே, தேரரின் அரசாங்க சேவை அனுபவம் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் ஆலோசகர் பதவிகளில் உள்ள அனுபவத்தை கருத்திற் கொண்டு, மேற்குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.4 ஆம் பிரிவின் அடிப்படையிலும், 2.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மிகவும் பொருத்தமான வழி முறையை ஆராய்ந்தா பிற்பாடும் குறித்த அந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரின் அறிவுறுத்தலின் படி தேரர் 2023.10.24 ஆம் திகதி முதல் ஆலோசகர் பதவியில் கடமையாற்றியுள்ளார். எனினும் இது தொடர்பான அறிவிப்பு தாமதமாகி, நியமன கடிதம் 2023.11.15 ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்டது. இதன்படி, அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| **4. மனித வள முகாமைத்துவம்** | |
| (அ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் சிரேஸ்ட நிலையில் பதவிகளில் 21 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நிறைவேற்று தரத்திற்கு உரிய இலங்கை நிர்வாக சேவை, விஞ்ஞான சேவையின் பதவிகளுக்கான ஆட் சேர்ப்பு, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதால், ஆப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க நிர்வாக அமைச்சு MISCO தரவுத் தொகுதி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் அவ்வப் போது அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிரந்தர | சட்ட அதிகாரி ஒருவரை திறந்த ஆட் சேர்ப்பின் கீழ் நேர்முகப் பரீட்சையை நடாத்தி நியமிப்பதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதான சட்ட அதிகாரி பதவிக்கு அமைச்சின் இணக்கத்துடன் |

| | |
|---|---|
| உத்தியோகத்தர் ஒருவரை சேர்த்துக் கொள்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அங்கீகரிக்கப்பட்ட சட்ட உத்தியோகத்தர் பதவிகள் 02 உம் வெற்றிடமாக காணப்பட்டது. | பிற அரச நிறுவனத்தின் அதிகாரி ஒருவரின் சேவையை பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (இ) சுற்றாடல் அமைச்சுக்காக தேவையின்றிய இலங்கை விவசாய சேவையின் I, II மற்றும் III தரங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகள் அமைச்சு பதவியணியின் பதவியாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 05 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. அந்த பதவிகளுக்காக வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை திருத்திக் கொள்வதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பிரிவு மற்றும் வன சீவராசிகள் பிரிவை இணைத்து அமைச்சின் தேவைகளுக்கு அமைய இலக்கம் ENV/ADM/02/02/65 ஐ உடைய மற்றும் 2026.03.13 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன் மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) 2023 சனவரி 25 ஆம் திகதி அமைச்சிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் 299 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விஞ்சி 267 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | அன்றிருந்த அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் கீழ் இவ் அமைச்சுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/CM/24/14 மற்றும் 2025.01.15 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக 568 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ் அமைச்சுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில், தற்போது அனுமதிக்கப்பட்ட வரம்பையும் மீறி பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. |

வைத்தியர் தம்மிக்க பட்டபெந்தி,
சுற்றாடல் அமைச்சர்